1975 அக்டோபர் 25] (டாக்டர். இரா. நெடுஞ்செழியன்)

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: துணைத் தலைவரவர்களே' 'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப் ட்ட, தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1975) நிறை வேற்றப்பட வேண்டும்'
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை: 'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1975) நிறைவேற்றப்பட வேண்டும்'.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

(பிற்பகல் 5-30)

(2) தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த-செல்திறன் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த–செல்திறன் சட்ட முன்வடிவு'' (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.''
என்று முன் மொழிகிறன்.

தமிழ்நாடு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) சட்டம் ஒன்று 1949 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. எந்தப்பள்ளியாவது சரியாக நடக்காமல் இருந்தாலோ அல்லது ஒழுங்காக இல்லாமல் இருந்தாலோ அந்தப் பள்ளியில் இருக்கின்ற ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாவதைத் தடுக்கும் பொருட்டு அந்தப் பள்ளியைக் குறிப்பிட்ட காலத்திற்கு அரசு எடுத்துக்கொண்டு மறுபடியும் அந்த நிர்வாகத்திற்கு திருப்பித்தருவதுதான் 1949 ஆம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் சட்டத்தின் அடிப்படை நோக்கம். அந்த அடிப்படையிலே பள்ளிகளை எடுக்கின்றபோது அந்தக் கல்வி ஆண்டு அல்லாமல் அடுத்த கல்வி ஆண்டுவரைதான் அரசு வைத்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு 1965–66 ஆம் பள்ளி ஆண்டின் இடையிலே ஒரு

194–196 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பள்ளியை அரசு ஏற்றுக்கொள்கிறது என்றால், 1966–67 ஆம் கல்வி யாண்டு முடியத்தான் அரசு வைத்துக்கொள்ள முடியும். மேலும் விரும்பினால் ஓராண்டு வரையிலும் அதாவது 1967–68 ஆம் ஆண்டு வரையிலும் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் சட்டம் வகை செய்தது. இந்தத்திருத்த–செல்திறன் சட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்குத்தான் கொண்டு வரப்படுகிறது. இதைக் கொண்டு வருவதன் முக்கிய காரணமே 1949–ஆம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் எழும்பூரிலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எழும்பூர் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரை அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாவதாக புகார்கள் பல பொது மக்களிடமிருந்தும் வந்தன. அதை அடிப்படையாக வைத்துத்தான் அந்தப் பள்ளியையும் அதற்குண்டான சொத்துக்களையும் அரசு ஏற்றுக்கொண்டது. அதனுடைய காலக்கெடு 31–5–1975–ஆம் தேதியுடன் முடிந்து விடுகிறது. மறுபடியும் அந்தப் பள்ளியின் நிர்வாகத்தை நிர்வாகிகளிடம் ஏற்றுக்கொள்ளுமாறு அரசு சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அந்தப் பள்ளிக்கூடத்தை அரசே ஏற்று மேலும் மூன்று ஆண்டுகளுக்குச் செம்மையாக நடத்து வதற்கு வழிவகை செய்வதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியர் பணி பாதுகாப்புச் சட்டத்திலே கூட ஒழுங்காக நடக்காத பள்ளிக்கூடங்களை 5 ஆண்டுகள் வரை அரசு எடுத்து நடத்தலாம் என்று போட்டிருக்கிறோம். 1949–ஆம் ஆண்டு சட்டத்திலே 31–5–1975–க்குப் பிறகும் நீட்டிப்பதற்குஇடமில்லை. அதற்காகவே அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பாக்கியம் பிள்ளை என்ற நிர்வாகக் குழுவினர் அதைத் திரும்ப ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. சட்டப்படி ஒரு கல்வி ஆண்டுக்கு நடைமுறைப்படுத்துவதை நீட்டிக்கலாம். ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாவதுடன் பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வரக்கூடிய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு மேலும் மூன்று ஆண்டுகள் நீடிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அதாவது மொத்தம் 5 ஆண்டுகள் நீட்டிக்க வழிவகை செய்யும். இந்தத் திருத்தச் சட்டத்தை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

'சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த–செல்திறன் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.